பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 42

செவ்வாய்க்கிழமை
07 ஜனவரி 2025

மார்கழி 23 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

கடந்தகால படுகொலை: விசாரணை வேண்டும்: » 02

வடக்கு மக்களுக்கு

## பொலிஸ், காணி அதிகாரங்கள் வழங்குவதற்கு அனுமதிக்கோம்

ராகுல தேரர் தெரிவிப்பு

**கொழும்பு, ஜனவரி 7**

வடமாகாண மக்களுக்கு சிறப்புச் சலுகைகள் வழங்கப்பட வேண்டும் என்பதை ஏற்கின்றோம். ஆனால், பொலிஸ், காணி அதிகாரங்களை வழங்கக்கூடாது என்று ராகுல தேரர் தெரிவித்துள்ளார்.

☞ 11

வடமாகாணத்தில்

## அரிசி பதுக்கல்; 774 சுற்றிவளைப்பு!

வவுனியா, ஜன. 7
அரிசி பதுக்கல்கள் தொடர்பில் 2024ஆம் ஆண்டில் வடமாகாணத்தில் 774 சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை தெரிவித்துள்ளது.
இது தொடர்பில் பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகாரசபையின் ☞ 11

## பதவி விலகினார் கனேடியப் பிரதமர்

இலங்கையில் இனப்படுகொலை என தீர்மானம் நிறைவேற்றிய தலைவர்



கொழும்பு, ஜன. 7
கனேடியப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ நேற்றுப் பதவி விலகியுள்ளார். உடனடியாக நடைமுறைக்கு வரும்வகையில் லிபரல் கட்சியின் தலைமைப் பதவியில் இருந்து விலகிய அவர், புதிய பிரதமர் தேர்வாகும் வரை பிரதமர் பதவியில் தொடரவுள்ளதாகவும் அறிவித்துள்ளார். ☞ 11

வவுனியாவில்

## விவசாய நிலங்களில் முளைக்கும் கட்டடங்கள்

» 11



## அரசியல்கைதிகளின் விடுதலை; யாழில் கையொப்பப் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 7
நீண்டகாலமாக சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் நேற்றுக் கையெழுத்துச் சேகரிக்கும் போராட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
போராளிகள் நலன்புரிச் சங்கத்தால் வடமாகாணம் தழுவிய ரீதியாக ☞ 11

தூய இலங்கைத் திட்டம்

## பேருந்துகள், ஓட்டோக்களின் அலங்காரங்களும் அகற்றம்!

கொழும்பு, ஜன. 7
தூய இலங்கைத் திட்டத்தின் கீழ், பேருந்துகள் மற்றும் ஓட்டோக்களில் பொருத்தப்பட்டுள்ள தேவையற்ற அலங்காரங்கள் அகற்றப்பட்டு வருகின்றன. ☞ 11

## கட்டாக்காலிகளை கட்டுப்படுத்துங்கள்

இல்லையேல் நடவடிக்கை பொலிஸார் கடும் எச்சரிக்கை

**யாழ்ப்பாணம், ஜன. 7**
வடக்கு மாகாணத்தில் வீதிகளில் அலைந்து திரியும் கட்டாக்காலிகள் தொடர்பில் கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் திலக் சீ.ஏ.தனபால தெரிவித்துள்ளார். ☞ 11

## பெண்களை காவுவாங்கும் நுண்நிதி திட்டங்கள்!

» 03

கீழே விழுந்துகிடந்த

## தங்கநகையை ஒப்படைத்தவரை கட்டிவைத்துத் தாக்கிய கும்பல்!

நால்வர் கைது: விசாரணை தொடர்கின்றது

யாழ்ப்பாணம், ஜன. 7
யாழ்ப்பாணம் – உரும்பிராய்ப் பகுதியில் உள்ள வெதுப்பகம் ஒன்றில் உணவு வாங்க வந்த கூலித்தொழிலாளி ஒருவர் நிலத்தில் விழுந்துகிடந்த தங்க ஆபரணத்தை மீட்டு, 'எவராவது தேடிவந்தால் கொடுங்கள்' என வெதுப்பகத்தில் வழங்கிய நிலையில், இளைஞர் குழு ☞ 11

முச்சந்தி முரளி



'தங்கத்தாலதான் இப்ப எல்லா இடமும் வில்லங்கம் கண்டியளோ...'

இலங்கையை

## போர்க்குற்றங்களுக்காக பொறுப்புக்கூற வைப்போம்

கனடாவின் எதிர்க்கட்சித் தலைவர் பொலியேவ் தெரிவிப்பு

ஒட்டாவா, ஜன. 7
போர்க்குற்றங்களுக்காக இலங்கையைப் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் மாற்றமில்லை என்று கனடாவின் எதிர்க்கட்சித் தலைவர் பொலியேவ் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
கனடாவில் இந்த மாதம் தமிழர் மரபுரிமை மாதமாகக் கொண்டாடப்படுகின்றது. எனினும், அதற்குரிய முழுமையான கௌரவம் இன்னமும் அடையப்படவில்லை. ☞ 11

வங்காலையில் படுகொலை செய்யப்பட்ட

## மேரிபஸ்ரியன் அடிகளாருக்கு மன்னாரில் நேற்று அஞ்சலி!

மன்னார், ஜன. 7
மன்னார் வங்காலையில் படுகொலை செய்யப்பட்ட அருட்தந்தை மேரிபஸ்ரியன் அடிகளாரின் 40ஆவது ஆண்டு நினைவுதினம் மன்னாரில் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது.
வங்காலை புனித அன்னம்மாள் ஆலயத்தில் ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையின் தலைமையில் இந்த அஞ்சலி நிகழ்வு ☞ 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல் அகழ்வு விடயத்தில் நடந்த விடயம் நல்லதே

## கடற்றொழில் அமைச்சர் தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், ஜன.7**
**சுண்ணக்கல் ஏற்றிவந்த பாரவூர்தி விடயத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் செயற்பட்ட விதம் நல்லது என்றே தோன்றுகின்றது. கல் அகழ்வு விடயத்தில் அதிகாரிகள் அசமந்தப் போக்குடன் உள்ளனர்- இவ்வாறு கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.**

நேற்றுமுன்தினம் சரசாலையில் கல் அகழ்வு நடைபெற்ற பகுதிகளை நேரில் சென்று பார்த்தபின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
சுண்ணக்கல் கொண்டுசென்ற பாரவூர்தியை வழிமறித்த நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன், பாரவூர்தியைப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார். குற்றச் செயல்கள் நடைபெறும்போது பொலிஸாருக்குத் தெரியப்படுத்தி அவர்கள் மூலமாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அவருக்கு அறிவுறுத்தியுள்ளேன்.
இந்தவிடயம் ஊடகங்களில் கடந்தசில தினங்களாகப் பேசப்பட்டது. தற்போது பார்க்கும்போது நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் செய்தது பரவாயில்லை அல்லது நல்லது என்றே தோன்றுகின்றது. அதன்பின்னர் தற்போது பல பிரச்சினைகள் வெளியே வந்துள்ளன.
சரசாலைப் பிரதேசத்தில் சட்டரீதியாகவும், சட்டரீதியற்றும் வேலைகள் நடக்கின்றன. தனியார் காணிகளில் அனுமதிபெற்று அகழ்வுகள் நடக்கின்றன. அவற்றுக்கு அருகில் உள்ள அரசகாணிகளில் அனுமதி பெறப்படாது பல செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இவற்றை ஆராயும்போது சட்டவிரோதமான செயற்பாடுகள் நடக்கின்றன என்பதை ஊகிக்கமுடிகின்றது. இதற்குப் பொறுப்புக்கூறவேண்டியவர்கள் வியாபாரிகளோ, தொழில் புரிகின்ற ஊழியர்களோ அல்லர். மாவட்டச் செயலர், பிரதேச செயலர், கிராம அலுவலர், புவிச்சரிதவியல் திணைக்கள அதிகாரிகளே இதற்குப் பொறுப்புக்கூற வேண்டும். அரச அதிகாரிகள் சரியாகச் செயற்படவில்லை என்ற குற்றச்சாட்டை முன்வைக்கின்றேன். இதுதொடர்பாக விசாரணை செய்து உரிய நடவடிக்கை எடுக்கவும் தீர்மானித்திருக்கின்றேன்.
சரசாலையில் உள்ள சுண்ணக்கல்லுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர் வழிமறித்த பாரவூர்தியில் இருந்த சுண்ணக்கல்லுக்கும் இடையே வித்தியாசம் இருக்கின்றது. அப்படியாயின் யாழ்ப்பாண மாவட்டம் முழுவதும் திருட்டுகள் இடம்பெறுகின்றதா என்ற கேள்வியும் எழுந்திருக்கின்றது. நடவடிக்கை எடுக்கப்பட்டால் வாழ்வாதாரம் பாதிக்கப்படும், மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்று சிலர் வாதம் முன்வைக்கின்றனர்.
ஆனால் இவ்வாறான அகழ்வுகள் மூலம் ஏற்படும் அனர்த்தங்கள் பல பரம்பரைகளைப் பாதிக்கும் என்பதை மறந்துவிடக் கூடாது. சில வியாபாரிகளின் பணப்பசியைப் போக்குவதற்காக இந்தச் செயற்பாடுகள் இடம்பெறுமாயின் எமது அரசாங்கத்தில் அது தடுத்து நிறுத்தப்படும் - என்றார். (எ-27)



# உள்ளாட்சி தேர்தலில் அரசுக்கு அபாயச்சங்கு

கொழும்பு, ஜன.7
உள்ளாட்சிசபைத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு எச்சரிக்கைச் சமிக்ஞையை நாட்டுமக்கள் வழங்குவார்கள் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.
இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
உள்ளாட்சிசபைத் தேர்தலுக்காக பெறப்பட்ட வேட்புமனுக்களை இரத்துச்செய்து, புதிதாக வேட்புமனுக்களைக் கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கான சட்டத்திருத்தம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது எனத் தெரியவருகின்றது. மார்ச் மாதமளவில் தேர்தல் நடைபெறும் என நம்புகின்றோம். அந்தத் தேர்தலை எதிர்கொள்வதற்கு நாம் தயாராக இருக்கின்றோம்.
நாட்டுமக்கள் தற்போது உண்மையை உணர்ந்துள்ளனர். உள்ளாட்சித் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு அதற்கான சமிக்ஞையை மக்கள் வெளிப்படுத்துவார்கள்-என்றார். (எ-44)

# புதிய அரசமைப்பை இயற்ற முழுமையாகப் பங்களிப்போம்!

## சபாநாயகர் தெரிவிப்பு



கொழும்பு, ஜன.7
புதிய அரசமைப்பை இயற்றுவதற்கு நாடாளுமன்றத்தால் வழங்கப்படவேண்டிய முழுப் பங்களிப்பையும் வழங்குவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்.
இதற்கு எதிரணிகளும் முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் என நம்புகின்றோம் -இவ்வாறு சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தெரிவித்துள்ளார்.
கொழும்பு பேராயருடன் இடம்பெற்ற சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
நாட்டில் பலமான ஆளுங்கட்சியொன்று உள்ளது. புதிய அரசமைப்பை இயற்றுவதற்குரிய வேலைத்திட்டத்தை முன்னெடுத்து அதை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தால், சட்டவாக்கசபையில் அதை நிறைவேற்றுவதற்குரிய பங்களிப்பை வழங்குவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவோம். புதிய அரசமைப்பு அவசியம் என நாட்டுமக்களும் கருதுகின்றனர். இதற்குரிய மக்கள் ஆணையும் வழங்கப்பட்டுள்ளது.
மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதற்குரிய பொறுப்பு உள்ளது. இது தொடர்பிலும் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்.
புதிய அரசமைப்பை இயற்றுவதற்கு எதிர்க்கட்சிகள் முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் என நம்புகின்றோம்-என்றார். (எ-44)

# கடந்தகாலப் படுகொலைகளுக்கான விசாரணைப் பொறிமுறை வேண்டும்!

## மல்கம் ரஞ்சித் ஆண்டகை வலியுறுத்து

கொழும்பு, ஜன.7
இலங்கையில் கடந்தகாலங்களில் இடம்பெற்ற படுகொலைகள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்குரிய பொறிமுறையை விரைவில் உருவாக்கவேண்டும் என்று பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை வலியுறுத்தியுள்ளார்.
இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
தூய இலங்கை வேலைத்திட்டம் சிறப்பானது. அதை நாம் வரவேற்கின்றோம். தெருக்களில் உள்ள குப்பைகளை அகற்றுவது மாத்திரம் அல்ல பொருளாதாரம், சமூகம், மனித ஒழுக்கம், சமூக மேம்பாடு உள்ளிட்ட விடயங்கள் பற்றியும் நடவடிக்கைகள் தேவை.
இந்த விடயத்தில் அரசாங்கம் பொறுப்புடன் செயற்படும் என நம்புகின்றோம்.
தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்குவந்து இன்னும் 3 மாதங்கள்கூட ஆகவில்லை. நாட்டில் கடந்த 70 ஆண்டுகளுக்கு மேலாக பலவீனப்படுத்தப்பட்ட ஜனநாயக வியூகத்தைச் சரிப்படுத்தல், பொருளாதார வீழ்ச்சிக்குரிய மோசடியான முடிவுகள் உள்ளிட்டவற்றை ஒரே தடவையில் சரிசெய்யமுடியாது என்பது எமக்குத் தெரியும். ஆனால் இந்த விடயத்தில் காத்திரமான நடவடிக்கைகள் அவசியம்.
அரசாங்கத்துக்கு மக்கள் ஆணை கிடைத்துள்ளது. அந்த ஆணையைப்பயன்படுத்தி, வழங்கிய உறுதிமொழிகளைநிறைவேற்றுவதற்கு தைரியமாக நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும். உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவத்தின் பின்னணியிலுள்ள உண்மைகள் கண்டறியப்படவேண்டும். அதைச் செய்தது யார், அதன் நோக்கம் என்ன, எவரின் ஒத்துழைப்புடன் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என்பன பற்றி முழுமையான விசாரணை முன்னெடுக்கப்படவேண்டும். இலங்கைக்குள் கடந்தகாலங்களில் இப்படியான பல சம்பவங்கள் நடந்துள்ளன. படுகொலைகள், காணாமல் ஆக்கப்பட்டமை, போன்ற பல சம்பவங்கள் தொடர்பில் சரியாக விசாரணை இடம்பெறவில்லை. இவை தொடர்பிலும் விசாரணை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். அதற்குரிய பொறிமுறை உருவாக்கப்படவேண்டும். புதிய அரசியலமைப்பை இயற்றுவதற்குரிய பணியும் விரைவில் ஆரம்பிக்கப்படவேண்டும். அதற்கான ஆரம்பம் தற்போது முன்னெடுக்கப்படவேண்டும்-என்றார். (எ-44)

# சுலோச்சனவின் விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு, ஜன.7
மேல் மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் சுலோச்சன கமகே உட்பட இருவருக்கு எதிர்வரும் 17ஆம் திகதிவரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.
நகர அபிவிருத்தி அதிகாரசபையால் சுவீகரிக்கப்பட்ட காணி ஒன்றுக்கு உடனடியாகச் செலுத்தப்படவேண்டிய நட்ட ஈட்டில் ஒரு பகுதியைச் செலுத்துவதற்காக 90 லட்சம் ரூபாவை இலஞ்சமாகப் பெற்றுக்கொண்டபோது இருவரும் கைதுசெய்யப்பட்டனர்.
அதேவேளை, சந்தேகநபர்களின் பிணைக் கோரிக்கை தொடர்பான உத்தரவு எதிர்வரும் காலங்களில் வெளியிடப்படும் என கொழும்பு பிரதான நீதிவான் தெரிவித்துள்ளார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களைக் காவுகொள்ளும் நுண்நிதிக்கடன் திட்டங்கள்!



## 200 பேர் உயிர்மாய்ப்பு

**கொழும்பு, ஜன.7**

**இலங்கையில் கடந்த சில வருடங்களில் நுண்நிதிக்கடன் வலையில் சிக்கிய சுமார் 200 பெண்கள் தங்களது உயிர்களை மாய்த்துக்கொண்டுள்ளனர் என்று தேசிய மகளிர் ஒன்றியத்தின் தலைவி ஹாஷினி சில்வா தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கையில் 28 இலட்சம் பேர் நுண்நிதிக்கடன் பெறுகின்றனர். அவர்களில் 24 இலட்சம் பேர் பெண்களாவர். நுண்நிதி நிறுவனங்கள் 38 தொடக்கம் 40 சதவீதம் வரை அதிக வட்டிக்குக் கடன்களை வழங்குகின்றன. கடனைச் செலுத்த முடியாத சில பெண்கள் அந்த நிறுவனங்களின் பிரதிநிதிகளால் பாலியல் துன்புறுத்தல்களுக்கு ஆளாகின்றனர். நுண்நிதிக்கடன் பிரச்சினையால் கிராமப்புறங்களில் உள்ள பெண்கள் கடுமையான பொருளாதார அழுத்தத்தைச் சந்திக்கின்றனர். அவர்களில் பலர் வருமானம் ஈட்டும் வாய்ப்புகள் இல்லாமலும், பதிவுசெய்யப்பட்ட வங்கிகளில் கடன்பெற முடியாதவாறும் நுண்நிதி நிறுவனங்களால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நிறுவனங்கள் வாரத்துக்கு 20 சதவீதம் முதல் 30 சதவீதம்வரை அதிக வட்டி வீதங்களுடன் கடனை வசூலிக்கின்றன. நுண்கடன் நிறுவனங்களை ஒழுங்குபடுத்தும் சட்டத்தை அரசாங்கம் கொண்டுவந்துள்ள போதிலும், அது இன்னும் சரியாக நடைமுறைப்படுத்தப்படவில்லை-என்றார். (எ-இ)

# சிறைச்சாலைச் சோதனைக்கு தொழில்நுட்ப ஒத்துழைப்பு!

கொழும்பு, ஜன.7

சிறைச்சாலை அதிகாரி பதவிகளில் நிலவும் வெற்றிடம் காரணமாக கைதிகளைச் சோதனையிடும் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன என்று சிறைச்சாலைகள் ஆணையாளர் காமினி பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சிறைச்சாலை அதிகாரிப் பதவிகளுக்கு ஆயிரத்து 800 வெற்றிடங்கள் உள்ளன. இந்த வெற்றிடங்களால் சோதனை நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் கைதிகளைச் சோதனையிடும் நடவடிக்கைகளுக்கு தொழில்நுட்ப ஒத்துழைப்பைப் பெறுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதேவேளை, சிறைச்சாலைகளில் கைதிகளின் எண்ணிக்கை சுமார் 300 சதவீதம் அதிகரித்துள்ளது - என்றார். (எ-இ)



# மீண்டும் உருவாகவுள்ள கடவுச்சீட்டுத் தட்டுப்பாடு

கொழும்பு, ஜன.7

புதிய கடவுச்சீட்டுகளை பெற்றுக்கொள்வதற்கான உத்தரவை அரசாங்கம் இதுவரை வழங்கவில்லை. கடவுச்சீட்டுத் தட்டுப்பாடு தொடருமானால் இலங்கையர்கள் பணிநிமித்தம் நாட்டை விட்டு வெளியேறுவதில் சிக்கல் ஏற்படும் என்று வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் எச்சரித்துள்ளது.

குடிவரவு மற்றும் குடியகல்வுதிணைக்களத்துக்கு அடுத்த சில வாரங்களில் சுமார் 30 ஆயிரம் கடவுச்சீட்டு விண்ணப்பங்கள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அடுத்துவரும் வாரங்களில் நடக்கவுள்ள கொரிய மொழித் தேர்ச்சிப் பரீட்சையில் தோற்றவுள்ளவர்களிடம் இருந்தே அதிகளவான விண்ணப்பங்கள் கிடைக்கும் என்று கூறப்படுகின்றது. அந்தப் பரீட்சையில் தோற்றுவதற்குக் கடவுச்சீட்டு இலக்கம் கட்டாயம் என்று கூறப்படுகின்றது. இந்த நிலையிலேயே வெளிநாட்டுவேலைவாய்ப்புப் பணியகம் மேற்கண்ட எச்சரிக்கையை விடுத்துள்ளது. (எ-இ)

# ரயில் சேவை பாதிப்பு



களுத்துறை தெற்கு ரயில் நிலையத்துக்கு அருகில் நேற்றுமுன்தினம் ரயில் ஒன்று தடம்புரண்டதால் கரையோர மார்க்க ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டன. மருதானையில் இருந்து களுத்துறை தெற்கு நோக்கிப் பயணித்த ரயிலே தடம்புரண்டது.

ரயிலை வழித்தட மேற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு, ரயில் சேவையைச் சீராக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. (எ-25)

# யானையிடமிருந்து தப்பியவரை பலியெடுத்த ஆறு

கொழும்பு, ஜன.7

யானையிடம் இருந்து தப்பிப்பதற்காக ஆற்றில் குதித்தவர், நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மட்டக்களப்பு-மயிலவெட்டுவான் வீரகட்டுப் பிரதேசத்தில் நடந்துள்ளது.

கணபதிப்பிள்ளை கருணாகரன் (வயது-50) என்பவரே உயிரிழந்தார். சம்பவதினம் இவர் தனது 14 வயது மகனுடன் விறகு வெட்டிக்கொண்டு திரும்பியபோது யானை துரத்தியுள்ளது. அச்சமடைந்த இருவரும் ஆற்றில் பாய்ந்துள்ளனர். மகன் ஆற்றை நீந்திக் கடந்தநிலையில், தந்தை ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டுள்ளார். பிரதேசமக்கள் பலமணிநேரம் தேடுதல் நடத்தியநிலையில் அவர் சடலமாக மீட்கப்பட்டார். (எ-25)




'அடங்காத காளை ஒண்டு அடிமாடாப் போன தடி கண்மணி' இப்பிடியொரு படப்பாட்டு வரியொண்டைக் கேட்டிருப்பியள். அந்தப் பாட்டில வாறமாதிரி 'இந்தா வெட்டுறன், விழுத்திறன்' எண்டு வீம்பா வெளிக்கிட்ட கனபேர், பிறகு வெட்டிப் பாம்பு மாதிரி அடங்கி ஒடுங்கிப்போய் இருக்கிறதையும் பார்த்திருப்பியள். அப்பிடி அவை முதல்ல சோடாக் காஸ் மாதிரி பொங்கிறதுக்கும், பிறகு புஸ்ஸெண்டு அடங்கிறதுக்கும் பின்னாலையும் சில காரணங்கள் இருக்கும். அதுகளைக் கண்டு பிடிச்சால் 'அட கோதாரி, உதுக்குத்தானே உவ்வளவுக்குப் பொங்கினவை?' எண்டு அவையிலை இருந்த மரியாதையே போடும். அப்பிடி இப்ப கொஞ்சநாளைக்கு முதல், வீட்டுக்கட்சியின்ர தலைவரா இருந்தவர் 'நான் தான் தலைவர். என்னை நிப்பாட்ட ஏலாது. நான் கோபத்தில ரிசைன் லெட்டர் அனுப்பிட்டன். அதுவும் கட்சிக்குள்ள நடந்த எலக்சனில வெண்டவர தலைமைப் பொறுப்பை ஏற்கச் சொல்லித்தான் அந்தக் கடிதம் போட்டனான். அவர் பதவி ஏற்காததால நானும் விலகத் தேவையில்லை' எண்டு கனக்க விளக்கமெல்லாம் சொன்னவர்தான் பாவை மாதிரி கட்சிக்குள்ள இருந்த அந்த அரசியல்வாதி. அந்தப் பாவையாரின்ர கதையை நம்பி, சிலபேர் அவருக்காக கட்சிக்குள்ள சண்டையும் பிடிச்சு, அவருக்காக வழக்கெல்லாம் போட்டவை.

ஆனால் அடுத்த மத்தியகுழுக்கூட்டத்துக்கு 'எனக்கு வருத்தம்' எண்டு சாட்டுச்சொல்லிப்போட்டு பாவையர் போகாமல் விட்டிட்டார். இப்ப அவருக்கு சப்போர்ட் பண்ணினவைக்குச் சிக்கல். பாவையர் இல்லாமல் எப்பிடி அவருக்காக மற்றவையோட மல்லுக்கட்ட முடியும்? பாவையர் அந்தக் கூட்டத்துக்குப் போகாட்டியும் அவரின்ர மகன் போனவர். அவராவது தகப்பனுக்காக கதைப்பாரெண்டு பார்த்தால், அவரும் 'கப்சிப்'. அதால அவையும் ஏலுமட்டும் மல்லுக்கட்டிப்போட்டு இடைநடுவில வெளியில வந்திட்டினம். கடைசியா பாவையருக்கு, சின்னப்பிள்ளையளைப் பேய்க்காட்ட சூப்புத்தடி குடுக்கிறமாதிரி, 'அரசியல் குழுத்தலைவர்' எண்ட உப்புச்சப்பில்லாத பதவியைக் குடுத்து கழட்டி விட்டிட்டினம். அவரின்ர தரப்பும் அதுக்கு எதிர்ப்புக் காட்டாமல் ஓமெண்டு வந்திட்டினம். இப்பிடி பாவையர் அண்டையான் மத்தியகுழுக்கூட்டத்துக்கு போகாததுக்கும், கூட்டத்துக்குப் போன மகன் கூட பம்மிக்கொண்டு இருந்ததுக்கும் பின்னால ஒரு 'டீல்' இருக்காம்.

அந்த மத்தியகுழுக்கூட்டம் நடக்க முதல்நாள், பாவையரைத் தலைவர் பதவியில இருந்து நிப்பாட்டவேணும் எண்டு அடம்பிடிக்கிற ரீமில இருக்கிற கொஞ்சப்பேர் அவரின்ர வீட்டை போனவை. அவைதான் அந்த 'டீலை' முடிச்சவையாம். 'நீங்கள் தலைவர் பதவியை பிரச்சினைப்படுத்தாமல் விட்டுத்தந்தால் உங்கட மகனுக்கு மாகாணசபை எலக்சனில சீற் தருவம்' எண்டதுதானாம் அந்த 'டீல்'. இதுக்குத்தானே அந்தாளும் அல்லாடிக்கொண்டு திரிஞ்சது. உடனேயே ஓமெண்டிட்டாராம். 'தலைமை எங்களுக்கு, மாகாணசபை சீற் மகனுக்கு' எண்ட 'டீல்' வடிவேலுவின்ர பேக்கரி டீல் மாதிரி நல்லாத்தான் கிடக்கு கண்டியளோ.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மகிழ்ச்சியான நாளாக அமையும். எதிர்பாராத செலவுகள் அதிகரிக்கும்.தேவையான பணம் கையில் இருப்பதால், உற்சாகமாகச் சமாளித்து விடுவீர்கள். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**இடபம்:** உற்சாகமான நாளாக அமையும். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். சிலருக்குத் திடீர் பொருள்வரவுக்கு வாய்ப்புண்டு. வாழ்க்கைத் துணைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த காரியம் நல்லபடி முடியும்.

**மிதுனம்:** இன்று எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்புண்டு. சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் யோகம் உண்டாகும். துணிச்சலாக சில முடிவுகளை எடுப்பீர்கள். சகோதரவகையில் சுபச்செலவுகள் ஏற்படக் கூடும்

**கடகம்:** இன்று உற்சாகமாகக் காணப்படுவீர்கள். உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை காணப்படும். சுபநிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படக்கூடும். தாய்வழி உறவுகளால் நன்மை உண்டாகும்.

**சிம்மம்:** காரியங்கள் முடிவதில் தாமதம் ஏற்பட்டாலும் முடித்துவிடுவீர்கள். இளைய சகோதரர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைப்பதில் தாமதம் ஏற்படக்கூடும். தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு உண்டாகும்.

**கன்னி:** தந்தைவழி உறவுகளால் பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். மாலையில் குடும்பத்துடன் உறவினர் வீட்டுக்குச் சென்றுவருவீர்கள்.

**துலாம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்குவரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக் கூடும். உங்கள் முயற்சிகளுக்கு வாழ்க்கைத் துணை ஒத்துழைப்புத் தருவார். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**விருச்சிகம் :** தெய்வ அனுக்கிரகம் நிறைந்த நாளாக இருக்கும். காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் முடிந்துவிடும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்புண்டு. பிள்ளைகள் பிடிவாதமாக நடந்துகொள்வார்கள்.

**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்குவரும். ஆனால், திடீர்ச்செலவுகளால் கையிருப்புக் கரையும். உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சியுடன் செலவும் உண்டாகும்

**மகரம்:** எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். சிலருக்குக் குடும்ப விஷயமாக வெளியூர்ப்பயணம் மேற்கொள்ள நேரிடும். மாலையில் உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி ஏற்படும்.

**கும்பம்** சகோதரர்களுக்காக செலவுசெய்ய வேண்டிவரும். சிலருக்குப் புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். மாலையில் குடும்பத்துடன் கோயில்களுக்குச் சென்றுபிரார்த்தனையைநிறைவேற்றுவீர்கள்.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்குவரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். வெளியூர்ப்பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. உறவினர்கள் வருகையால் சிற்சில சங்கடங்களைச் சமாளிக்கவேண்டிவரும்.

# சோதனைகளால் தொழிற்றுறை பாதிப்பு

## பஸ் உரிமையாளர் சங்கப் பிரதிநிதிகள் குற்றச்சாட்டு

**கொழும்பு, ஜன.7**

**தூய இலங்கை வேலைத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் சோதனை நடவடிக்கைகள் காரணமாக பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது என்று பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். இந்தப் பிரச்சினைகள் தொடர்பாக பொலிஸ்மாஅதிபருடன்கலந்துரையாடுவதற்குத்தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.**

மோட்டார்வாகனக் கட்டளைச்சட்டத்தின்கீழ் பஸ்களுக்குள் சென்று சாரதிகளுக்கு எதிராகச் சட்டநடவடிக்கை எடுப்பதற்கான ஏற்பாடுகள் எவையும் இல்லை. வேகத்தடையை நிர்ணயிக்கும் வீதிச்சமிக்ஞைகள் இல்லாத இடங்களில் வேகமாக வாகனம் செலுத்துவதற்காகச் சட்ட நடவடிக்கை எடுக்கமுடியாது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

"தூய இலங்கை" வேலைத்திட்டத்தின் கீழ் பொலிஸாரால் விசேட வாகனச்சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

போக்குவரத்துப் பொலிஸார் சிவில் உடையில் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்துவருகின்றனர்.

இவர்கள் பயணிகள் பஸ்களை ஆய்வுசெய்வதுடன், போக்குவரத்து விதிமீறல்கள் தொடர்பாகச் சாரதிகளை எச்சரிக்கும் பணிகளிலும் ஈடுபட்டுவருகின்றனர்.

இந்தநிலையிலேயே சோதனை நடவடிக்கைகளால் தங்களின் தொழிற்றுறை பாதிக்கப்படுகின்றது என்று பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். (எ-25)

# குறுக்கே பாய்ந்த நாயால் 12 வயதுச் சிறுவன் பலி!

அநுராதபுரம், ஜன.7

நாயுடன் மோதுவதைத் தவிர்க்க முயன்ற முச்சக்கரவண்டி, எதிரே வந்த பஸ்ஸுடன் மோதி விபத்துக்குள்ளானதில் 12 வயதுச் சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் ராஜாங்கனை, அநுராதபுரம் புத்தளம் பிரதான வீதியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடந்தது. முச்சக்கரவண்டியின் சாரதியும், அதில் பயணித்த சிறுவனும் காயமடைந்தநிலையில் நொச்சியாகம மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

காயமடைந்த சிறுவன் உயிரிழந்துள்ள நிலையில், சாரதி மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். பஸ்ஸின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ள நிலையில் ராஜாங்கனைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (எ-45)

# குருபூசை நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜன.7

யாழ். நல்லூர் தேரடிச் சித்தர் செல்லப்பா சுவாமிகளின் மாதாந்த குருபூசை நிகழ்வு நல்லூர் வீதியில் அமைந்துள்ள சுவாமிகளின் நினைவாலயத்தில் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

திருமுறை நற்சிந்தனைப் பாடல்களைத் தொடர்ந்து, காலை 11மணிக்கு 'புராணபடன மகிமை' எனும் தலைப்பில் ஓய்வுநிலை திட்டப்பணிப்பாளர் சைவப்புலவர் சு.தேவமனோ கரன் உரையாற்றவுள்ளார். நிகழ்வில் அனைத்து ஆர்வலர்களையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (எ-25)

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
வினாசித்தம்பி ஆனந்தக்கிருஷ்ணன்
(Retired Officer, State Film Cooperation, Ceylon)

தோற்றம் 19.10.1936 — மறைவு 10.01.2022

பாசத்தின் உறைவிடமே, பண்பின் ஒளிவிளக்கே
பண்ணிய புண்ணியத்தால் பரமனடி நாடி
விண்ணுலகை நண்ணி விரைந்தீரோ!
ஆண்டுகள் நகர்ந்தாலும் நினைவுகள் நகர்வதில்லை
மூன்றாம் ஆண்டின் நிறைவு நாளில்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை
வேண்டுகின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்

ஆலங்குளாய்,
சண்டிலிப்பாய் வடக்கு.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# அழிவுக்கான ஒப்புதல்!

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் அதனுடன் இணைந்த குற்றச்சாட்டுகளுக்கு உள்நாட்டுப் பொறிமுறையூடாகவே அரசாங்கம் பொறுப்புக்கூறும் என்று திட்டவட்டமாக அறிவித்திருக்கின்றது இலங்கை அரசாங்கம். அத்துடன், இலங்கைக்கு எதிராக வெளிப்புல சாட்சியத் திரட்டல்களை மேற்கொள்ளக்கூடாது என்றும், அவ்வாறான சாட்சியங்களுக்கும் இலங்கைக்கும் இடையில் எந்தத் தொடர்பும் இல்லை எனவும் இலங்கை அரசாங்கம் மேலும் அறிவித்திருக்கின்றது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 58ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் பெப்ரவரி மாதம் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தொடரில் இலங்கை அரசாங்கத்துக்கு எதிராகக் கடுமையான தீர்மானங்கள் நிறைவேறச் சாத்தியங்கள் இல்லை. ஆனால், வாய்மொழிமூலக் கேள்விகள் மற்றும் விசாரணைகள் அல்லது குறைந்தபட்சம் அறிக்கையிடல்களேனும் இருக்கலாம் என்று கருதப்படும் நிலையில்தான் இந்த அறிவிப்புகளை இலங்கை அரசாங்கம் வெளியிட்டிருக்கின்றது.

இலங்கையில் இதுவரை ஆட்சியில் இருந்த அரசாங்கங்களும் இதே நடவடிக்கைகளைத்தான் மேற்கொண்டன. ஆதலால், ஜனாதிபதி அநுரகுமார தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் அதே பாதையில் பயணப்படுவது ஒன்றும் உலக அதிசயம் அல்ல. இன்னும் சொல்லப்போனால், பாதை வேறுபட்டால், பயணத்தின் முடிவு கோத்தாபயவுக்கு நேர்ந்ததை விடவும் மோசமாயிருக்கும் என்ற புரிதல் தேசிய மக்கள் சக்தியினருக்கு இருக்கவே செய்யும். எனவே, தேசிய மக்கள் சக்தியினர் விடுத்துள்ள அறிவிப்புகள் எதிர்பார்த்தவையே. ஆனால், கடந்த அரசாங்கங்கள் இந்த அறிவிப்புகளை வெளியிட்டமைக்கும், தேசிய மக்கள் சக்தியினர் அதே அறிவிப்புகளை விடுக்கின்றமைக்கும் இடையில் ஒரு வேறுபாடு காணப்படுகின்றது. தேசிய மக்கள் சக்தியினரின் வாயால் வரும் 'சர்வதேசப் பொறிமுறைக்கு அனுமதியில்லை' என்ற வார்த்தைகளுக்கு கனதியும், கம்பீரமும் அதிகம். எவ்வாறெனில், இந்த அரசாங்கத்தைத் தேர்ந்தெடுத்தது எமது மக்களும்தான்.

இதுவரை காலமும் நடைபெற்ற பொதுத்தேர்தல்களில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு வடக்கிலும், கிழக்கிலும் 'தேசியக் கட்சியான' தேசிய மக்கள் சக்தியினர் ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளனர். தமிழ் மக்களின் ஆணையுடனும்தான் அவர்கள் ஆட்சியமைத்துள்ளனர். எனவே, அவர்கள் தாம் மேற்கொள்ளும் முடிவுகளை, தமிழர்களின் ஒப்புதல் வாக்குமூலமாகக் கொண்டு பரப்புரைகளை மேற்கொள்வதற்கு அதிக சாத்தியங்கள் உள்ளன. தமது முடிவுகளுக்கான சர்வதேச அங்கீகாரத்தைத் தேடிக்கொள்வதில், தமக்குக்கிடைத்த தமிழர்களின் வாக்குகளை ஒரு கருவியாக தேசிய மக்கள் சக்தியினர் நிச்சயம் பயன்படுத்துவார்கள். இந்தச் சவால்களையெல்லாம் தகர்த்தும் மேவியும்தான் எமது குரலை நாம் வலுவாக நிலைநாட்ட வேண்டியிருக்கின்றது. அதற்குத் தமிழ்த்தேசியக் கட்சிகளின் ஒற்றுமை தவிர்க்கமுடியாததாக அமைகின்றது. ஆனால், தமிழ்த்தேசியக் கட்சிகளிடையே நீடித்த ஒற்றுமை நிலைபெறுவதற்கு முன்னர், இலங்கையின் இனப்பிரச்சினை தீர்ந்தாலும் தீரும். அவ்வளவு கடினமானது அது.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளொரு நல்வார்த்தை

"மூட நம்பிக்கையும் குருட்டுப் பழக்கமும் சமூகத்தின் முதல் பகைவர்கள். விதியை நம்பி மதியை இழக்காதே."

–தந்தை பெரியார்–





புதிய ஆண்டின் முதல் அமர்வு

## இன்று கூடுகிறது நாடாளுமன்றம்!

கொழும்பு, ஜன.7
இந்த ஆண்டின் முதலாவது நாடாளுமன்ற அமர்வு இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகவுள்ளது. இன்றுமுதல் எதிர்வரும் 10ஆம் திகதி வரை நாடாளுமன்றம் கூடவுள்ளது.

காலை 9.30 மணி முதல் 10.30 மணிவரை வாய்மூல விடைக்கான கேள்விக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

முற்பகல் 10.30 மணிமுதல் மாலை 5.30 மணிவரை 'மத்திய ஆண்டு நிதிநிலை அறிக்கை 2024' தொடர்பில் ஆளுங்கட்சியால் கொண்டுவரப்படும் சபை ஒத்திவைப்புப் பிரேரணை மீதான விவாதம் நடைபெறவுள்ளது. (எ-இ)

## திறைசேரி உண்டியல்கள் ஏலத்தில்

கொழும்பு, ஜன.7
ஒரு லட்சத்து 2 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்கள் நாளை ஏலத்தில் விடப்படவுள்ளன என்று இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

91 நாள்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 30 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும், 182 நாள்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 30 மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும், 364 நாள்கள் முதிர்வுக் காலத்தைக்கொண்ட 42 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் ஏல விற்பனையின் ஊடாக வழங்கப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-25)

## திசரவின் மறியல் நீடிப்பு

முன்னாள் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணக்காரவின் சகோதரரான திசர நாணயக்காரவின் விளக்கமறியல் எதிர்வரும் 17ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பெற்றுத்தருவதாகக்கூறி பணமோசடி செய்த குற்றச்சாட்டில் இவர் அண்மையில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். (எ-இ)



## கட்டுப்பாட்டு விலையால் அரிசிக்குச் சிக்கல்

கொழும்பு, ஜன.7
கட்டுப்பாட்டு விலையில் அரிசியை விற்பனை செய்யமுடியாதுள்ளதால் அதற்கான உரிய தீர்வை வழங்கவேண்டும் என்று கொட்டக்கலை ஐக்கிய வர்த்தக சங்கம் ஜனாதிபதிக்கும், வர்த்தக அமைச்சருக்கும் கடிதம் அனுப்பியுள்ளது.

இதற்குத் தீர்வு கிடைக்காவிட்டால் அரிசி விற்பனையில் இருந்து விலகியிருக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அந்தச் சங்கத்தின் தலைவர் புஸ்பா விஸ்வநாதன் தெரிவித்துள்ளார். (எ-இ)




## ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி

கொழும்பு, ஜன.7
கடந்தவாரத்துடன் ஒப்பிடும்போது நேற்று அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி சற்று வீழ்ச்சியடைந்திருந்தது.

நேற்று அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 289.72 ரூபாவாகவும், விற்பனைப் பெறுமதி 298.41 ரூபாவாகவும் காணப்பட்டது. (எ-இ)

நாளை
புதன்கிழமை - மார்கழி - 24
08.01.2025
சர்வதேச நிகழ்ச்சியாளர் தினம்
சுபநேரம் : 05.02 - 06.32
ராகுகாலம் : 12.32 - 02.02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10 ஆம் திகதிக்குள் எரிபொருள் மானியம்

## கடற்றொழில் பிரதியமைச்சர் தெரிவிப்பு

**காலி, ஜன.7**

**கடந்த நவம்பர் மற்றும் டிசெம்பர் மாதங்களுக்கான எரிபொருள் மானியத்தை வழங்குவது தொடர்பில் அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது என்று கடற்றொழில் பிரதி அமைச்சர் ரத்ன கமகே தெரிவித்துள்ளார்.**

நேற்றுமுன்தினம் காலி, ஹபராதுவப் பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சிறுதொழில் மீன்பிடியில் ஈடுபடுவோருக்கும், நெடுநாள் படகு உரிமையாளர்களுக்கும் எரிபொருள் மானியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கடந்த இரு மாதங்களுக்கான எரிபொருள் மானியத்தை எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் வழங்க எதிர்பார்க்கின்றோம்.

மீன்பிடி உபகரணங்களின் விலை அதிகரிப்பைக் கட்டுப்படுத்துவதற்கு தற்போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் - என்றார். (எ-25)



# நீதியரசர்கள் நியமனம்

## அரசமைப்புப் பேரவை அனுமதி

கொழும்பு, ஜன.7

மேல் நீதிமன்ற நீதிபதிகளான கே.எம்.சரத் திஸாநாயக்க மற்றும் பிரதீப் ஹெட்டியாராச்சி ஆகியோரை மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களாக நியமிப்பதற்கு அரசியலமைப்புப் பேரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் இவ்விருவரின் பெயர்களும் அரசமைப்புப் பேரவையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டன.

மேல் நீதிமன்ற நீதிபதிகளான திஸாநாயக்க மற்றும் ஹெட்டியாராச்சி ஆகியோர் அடுத்தவாரம் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களாகப் பதவிப் பிரமாணம் செய்யவுள்ளனர். (ச)

# ஓய்வூதிய நிலுவையை வழங்கக்கோரி மனு!

யாழ்ப்பாணம், ஜன.7

வழங்கப்படாதுள்ள ஓய்வூதியத் தொகையை வழங்கக்கோரி வடமாகாண ஓய்வூதியர் உரிமைகளைப் பேணிப்பாதுகாக்கும் அமைப்பு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு மனுவொன்றைக் கையளித்துள்ளது. 2016ஆம் ஆண்டு முதல் 2019ஆம் ஆண்டுவரை ஓய்வுபெற்று, 1.1.2020 வழங்கப்படவேண்டிய ஓய்வூதியத் தொகை வழங்கப்படாது பாதிக்கப்பட்டுள்ள 300க்கும் மேற்பட்ட ஓய்வூதியர்களின் கையொப்பத்துடன் இந்த மனுக் கையளிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்த ஓய்வூதியர்கள் இந்த மனுவில் கையொப்பமிட்டுள்ளனர். வழங்கப்படாதுள்ள தொகையை 1.1.2025இல் இருந்தாவது வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அந்த மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# பருத்தித்துறையில் குருதிக்குத் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், ஜன.7

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் தற்போது ஏ+, ஏ.ஓ ஆகிய இரத்த வகைகளுக்கு கடும் தட்டுப்பாடு நிலவுகின்றது என்று தெரிவிக்கப்படுகிறது. இரத்ததானம் செய்ய விரும்புவோர் பருத்தித்துறை இரத்தவங்கிக்கு வந்து இரத்ததானம் வழங்கி உதவவேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ள மருத்துவமனை நிர்வாகத்தினர், இதன்மூலம் நோயாளர்களுக்குச் சிகிச்சையைச் சீராக வழங்கக் கூடியதாக இருக்கும் எனத் தெரிவித்துள்ளனர். (எ-33-27)

# காய்ச்சல் அறிகுறிகள் தென்பட்டால் அவதானம்

சாவகச்சேரி, ஜன.7

தென்மராட்சிப் பிரதேசத்தில் டெங்கு மற்றும் உண்ணிக்காய்ச்சலால் பீடிக்கப்படுபவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதால் பொதுமக்கள் அவதானமாகச் செயற்படவேண்டும் என்று சுகாதாரத்துறையினர் அறிவுறுத்தியுள்ளனர்.

டெங்குத் தொற்றுக்குள்ளான இருவரும், உண்ணிக்காய்ச்சலுடன் ஒருவரும் கடந்த சனிக்கிழமை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். வயல்களில் வேலை செய்வோர் மற்றும் பற்றைகளைத் துப்புரவு செய்வோர் காய்ச்சல் அறிகுறி தென்பட்டால் அருகில் உள்ள அரசாங்க மருத்துவமனையில் மருத்துவ ஆலோசனை பெறுவதுடன், குருதிப் பரிசோதனை மேற்கொள்வது அவசியம் என்று சுகாதாரத்துறையினர் தெரிவித்துள்ளனர். (எ-25,9)

# மண்டபம் கையளிப்பு

முல்லைத்தீவு, ஜன.7

முல்லைத்தீவு - நெடுங்கேணி தண்டுவான் வெள்ளைப் பிள்ளையார் கோவிலடி கற்பகா அறநெறிப் பாடசாலையில் இருபக்க கொட்டகை மண்டபங்கள் புதிதாக அமைக்கப்பட்டு பாடசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளன.

சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தினரால் 9 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் இவை அமைக்கப்பட்டன.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நிகழ்வில் கொட்டகை மண்டபங்கள் திறக்கப்பட்டு அறநெறிப் பாடசாலை நிர்வாகத்திடம் வழங்கப்பட்டன.

கற்பகா அறநெறிப் பாடசாலையின் இணைப்பாளர் அ.சுகந்தன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். (எ-45-66)

# கோப்பாயில் குரங்குகள் அட்டகாசம்

கோப்பாய்ப்பிரதேசத்தில் குரங்குகளின் தொல்லை அதிகரித்துள்ளது என்று பிரதேசமக்கள் தெரிவிக்கின்றனர். குரங்குகள் பயன்தரு மரங்கள், காய்கறிச் செய்கை என்பவற்றைச் சேதப்படுத்துகின்றன என்றும் கோப்பாய் வடக்கில் உள்ள ஆலயம் ஒன்றின் கூரை ஓடுகளும் குரங்குளால் சேதப்படுத்தப்பட்டுள்ளன என்றும் அந்தப் பிரதேசமக்கள் விசனம் தெரிவித்துள்ளதுடன், குரங்குகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-25,17)

கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் விநாயகர் சஷ்டி விரதத்தின் இறுதிநாளான கடந்த ஞாயிற்றுக்கிழமை இலட்சார்ச்சனை, சிறப்புப் பூஜைகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து விநாயகப்பெருமான் வீதி உலா வந்தார். (எ-25-17)



# பனங்கிழங்குக்கு 'மவுசு'



யாழ்ப்பாணம், ஜன.7

யாழ். சந்தைகளில் பனங்கிழங்குகளின் விலை குறைவடைந்துள்ளது. பனங்கிழங்குகள் சந்தைக்குக் கொண்டுவரப்படுவது அதிகரித்துள்ள நிலையில், தீவகப்பகுதியிலிருந்து அதிகளவான பனங்கிழங்குகள் யாழ்.நகருக்குக் கொண்டுவரப்படுகின்றன. உள்ளூர் வாசிகள் உட்பட சுற்றுலாப் பயணிகளும் பனங்கிழங்குகளை ஆர்வத்துடன் கொள்வனவு செய்கின்றனர் என்று வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். (எ-25,17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

# சின்னத்துரை ஜெகநாதன்

## (முன்னாள் சிறைக்காவல் அதிகாரி)



**அன்னை மடியில்** **25.02.1949** **அம்பாள் அடியில்** **03.01.2025**

யாழ். நயினாதீவு 2ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாக வும், கனடா Toronto வை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரை ஜெகநாதன் கடந்த 03-01-2025 வெள்ளிக்கிழமை அன்று கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற S.R சின்னத்துரை - சீதேவிப்பிள்ளை தம்பதியரின் தவப்புதல்வனும், காலஞ் சென்றவர்களான A.K சுப்பிரமணியம் - விசாலாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும், கனகாம்பிகை (Register of Marriage) அவர்களின் ஆருயிர்க் கணவரும், காந்திமலர் அவர்களின் பாசமிகு சகோதரரும், ஜெசிதா, ஜெசிந்தா, ஜெய்சுரேஷ், ஜெனிதா, காலஞ்சென்ற ஜெய்கணேஷ், மற்றும் ஜெய்ரமேஷ், ஜீவிதா, ஆகியோரின் பாசமிகு தந்தை யும், குமாரசூரியர், மங்களேஸ்வரி, காலஞ்சென்ற வர்களான மோகனாம்பிகை, மகேஸ்வரி, தணிகாசலம், திவாகரன் ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற வரகளான சிவசுப்பிரமணியம், செல்வரெத்தினம் மற்றும் சிவரஞ்சினி ஆகியோரின் சகலனும், காலஞ் சென்ற மணிவண்ணன், மற்றும் சுரேஸ்குமார், சிவறஞ்ஜனி, பிரதீபன், குல்ஜித், பாலமுகுந்தன் ஆகியோரின் அருமை மாமானாரும், ஜனனி, ஜனனன், அபிலாஸ், அஸ்வின், ஜெய்வின், ஜெவீனா, ஜெனிஷா, ஜெகன், ஜீவன், ஜெலீனா, ஜெலியா, ஜெய்லீ, பானுயா, ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்,

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.01.2025) செவ்வாய்க்கிழமை கனடாவில் நடைபெறவுள்ளது.**

அன்னாரின் இரங்கல் நிகழ்வு இன்று (07.01.2025) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் நயினாதீவில் உள்ள அவரின் இல்லத்தில் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**

**குடும்பத்தினர்**

**கனகாம்பிகை (மனைவி)**
**+16479225094**

**சுரேஷ் (மகன்)**
**+14166164046**

**செந்தில்குமரன் (மருமகன்)**
**0771968573**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்காள விரிகுடாவில்

# ஒரு வாரத்துக்குள் 2 காற்றுச் சுழற்சி

யாழ்ப்பாணம், ஜன. 7
தென்கிழக்கு வங்காள விரிகுடாவில் இன்றுமுதல் அடுத்த ஒரு வாரத்துக்குள் இரண்டு காற்றுச் சுழற்சிகள் உருவாகும் சாத்தியங்கள் உள்ளன என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியல்துறையின் தலைவரும், வானிலையாளருமான நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இன்று செவ்வாய்க்கிழமை புதிய காற்றுச் சுழற்சி உருவாகும் வாய்ப்புள்ளது. இது எதிர்வரும் 8ஆம் திகதி முதல் மேற்கு வடமேற்குத் திசை நோக்கி நகருமென எதிர்பார்க்கப்படுகிறது. புதிய காற்றுச் சுழற்சி காரணமாக எதிர்வரும் 8ஆம் திகதி தொடக்கம் 12ஆம் திகதிவரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மிதமானது முதல் கனமானது வரை மழை கிடைக்கும் சாத்தியங்கள் அதிகம் உள்ளன. எதிர்வரும் 12ஆம் திகதிக்குப் பின்னரும் மழை தொடரும் சாத்தியங்கள் உள்ளன. ஏனெனில், எதிர்வரும் 12ஆம் திகதி மீண்டும் ஒரு காற்றுச் சுழற்சி தென்கிழக்கு வங்காள விரிகுடாவில் உருவாகும் வாய்ப்புள்ளது. அடுத்த சில நாட்களின் பின்னரே இதனை உறுதிப்படுத்த முடியும். எனவே, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் விவசாயிகள் மேற்குறிப்பிட்ட நாட்களைக் கருத்தில் கொண்டு தமது நெல், உழுந்து மற்றும் பயறு போன்ற அறுவடைச் செயற்பாடுகளை மேற்கொள்வது சிறந்தது. எதிர்வரும் 9ஆம் திகதி முதல் 12ஆம் திகதி வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் கடற்பகுதிகள் கொந்தளிப்பான நிலையில் காணப்படும். எனவே, மீனவர்கள் இந்த நாள்களில் கடலுக்குச் செல்வதைத் தவிர்ப்பது நல்லது -என்றார். (ம-66)

# ஊடக சுதந்திரத்தில் கைவைக்கமாட்டோம்

## ஊடக அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 7
ஊடக சுதந்திரத்தில் ஒருபோதும் கைவைக்க மாட்டோம் என்று ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், ஊடகங்களின் சுதந்திரத்தை அடக்கியாள்கின்றது என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி குற்றஞ்சாட்டி வருகின்றது. இவ்வாறானதொரு பின்னணியிலேயே, தமது ஆட்சியில் ஊடகசுதந்திரத்தில்கைவைக்க மாட்டோம் என்று ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஊடக சுதந்திரத்தில் நாம் கைவைக்க மாட்டோம். எமது ஆட்சியில் ஊடகவியலாளர்களுக்கு கடுகளவேனும் பாதிப்பு ஏற்படாது. ஜனநாயகம் மற்றும் கருத்துச் சுதந்திரத்தை பாதுகாப்பதும் மக்கள் எமக்கு வழங்கிய ஆணைகளுள் ஒன்றாகும். எனவே, மக்களின் ஆணையை நாம் நிறைவேற்றுவோம்.

ஊடகம் என்பது வேறு, ஊடகத்தை வைத்து அரசியல் செய்யும் தரப்பு என்பது வேறு. அவ்வாறு செயற்படும் சில ஊடகங்கள் உள்ளன. அவற்றுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். நாடு தற்போது சுவாசிக்கத் தொடங்கியுள்ளது. எனவே, மக்களின் மனங்களை மாற்றும் நோக்கில் திரிவுபடுத்தப்பட்ட செய்திகளை வெளியிடக் கூடாது - என்றார். (ம-44)

## நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்
## சபைக்குச் சொந்தமான மண்டபங்களை வாடகைக்கு வழங்குவதற்கான கேள்வி கோரல்

சபைக்குச் சொந்தமான கீழ்க்குறிப்பிடப்படும் அட்டவணையில் விவரிக்கப்பட்ட மண்டபங்களை வாடகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கீழ் உள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக நல்லூர் பிரதேச சபையால் கோரப்படுகின்றது.

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :- 07.01.2025ம் திகதி தொடக்கம் 21.01.2025 திகதி பி.ப 2.00 மணிவரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி :- 22.01.2025ம் திகதி மு.ப 11.00 மணிவரை
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி :- 22.01.2025ம் திகதி மு.ப 11.00 மணிக்கு
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் இடம் :- கலந்துரையாடல் மண்டபம், தலைமை அலுவலகம்,நல்லூர் பிரதேச சபை.

| தொ. இல | கடை விபரம் | தற்போதைய மாதாந்த வாடகை | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT,NBT நீங்கலாக) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் (VAT,NBT நீங்கலாக) | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் (VAT,NBT நீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| 01 | கொக்குவில் மீன்சந்தை வளாகத்தில் மேல்மாடியில் அமைந்துள்ள மண்டபம் | 43,000.00 | 1,548,000.00 | 100,000.00 | 2000.00 |
| 02 | கொக்குவில் மரக்கறிச் சந்தை வளாகத்தில் மேல்மாடியில் அமைந்துள்ள மண்டபம் | 65,000.00 | 2,340,000.00 | 100,000.00 | 2000.00 |

1. கேள்விப்பத்திரங்கள் இருபிரதிகளில் தயாரிக்கப்பட்டு, செயலாளர், நல்லூர் பிரதேச சபை, 14/5.கருவப்புலம் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு, பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும்.
2. கேள்விப்பத்திரங்கள் மீளளிக்கப்படாத படிவக்கட்டணமும், மீளளிக்கப்படக்கூடிய வைப்புப்பணமும் செலுத்திப் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்களை பெறுபவர்கள் கோரிக்கைக் கடிதத்தினையும் தமது அடையாள அட்டையையும்,கிராம அலுவலரினால் வழங்கப்படும் வதிவிடச் சான்றிதழையும் கொண்டு வருதல் வேண்டும்.
3. எந்தவொரு கேள்வியையும் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
4. ஏற்றுக்கொள்ளக் கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்படமாட்டாது.
5. கேள்விப்படிவத்தினை பெற்றுக்கொண்ட போதும் அவற்றை கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் காலத்திற்குள் சமர்ப்பிக்காதவிடத்து கேள்விவைப்புப் பணம் எக்காரணம் கொண்டும் மீளளிக்கப்படமாட்டாது.
6. கேள்வி திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
7. தெரிவு செய்யப்படும் குத்தகைகாரர் தாங்கள் சமர்ப்பித்த கேள்வித்தொகை மற்றும் ஒப்பந்த நிபந்தனைகளிற்கும் முழுக்குத்தகை காலத்திற்கும் (3 வருடம் முழுவதும்) நடாத்துதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இடை விலக முடியாது.
8. தெரிவு செய்யப்படும் குத்தகைகாரர் தாங்கள் சமர்ப்பித்த கேள்வித்தொகையின் 1/3 பங்கு பணத்தினை அறிவித்தல் கிடைத்து 07 நாட்களுக்குள் காசாக செலுத்தி (அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்படும் மேலதிக வரிகள் உட்பட) சபையுடன் உடன்படிக்கை செய்து கொள்ளல் வேண்டும்.
9. தங்களால் செலுத்தப்படும் கேள்வித்தொகை எக்காரணம் கொண்டும் தங்களிற்கு மீளளிக்கப்படமாட்டாது.
10. தங்களது கேள்வித்தொகைக்கு மேலதிகமாக பாதுகாப்பு வைப்புப்பணமாக ரூபா500,000.00இனை செலுத்த வேண்டும்.அத்துடன் கடைத்தொகுயில் சேதம்எவையேனும் ஏற்படுத்தப்படுமிடத்து தங்களது ஒப்பந்தம் முடிவடையும் காலப்பகுதியில் தங்களது பாதுகாப்பு வைப்புப் பணத்திலிருந்து குறித்த சேதங்களுக்கான செலவினம் கழிக்கப்பட்டு மிகுதிப்பணமே மீளளிக்கப்படும். கடைத்தொகுதியில் புதிய மின்னிணைப்புக்களோ அல்லது அமைப்பினை மாற்றி அமைக்கும் வேலைகளோ மேற்கொள்வதெனில் சபையின் அனுமதியினைப்பெற்றே மேற்கொள்ள வேண்டும்.
11. தங்களால் நடத்த உத்தேசிக்கப்படும் வியாபாரத்தின் தன்மை சபையால் பரிசீலிக்கப்பட்ட பின்னரே அனுமதி வழங்கப்படும்.
12. சபையால் தீஉமானிக்கப்படும் வியாபார உரிமக் கட்டணத்தினை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிமச் சான்றிதழினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.
13. சித்திகர வாடகை உடன்படிக்கையாளர் நல்லூர் பிரதேச சபையுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு இணங்க நடந்து கொள்ள வேண்டும்.
14. கேள்வி தொடர்பான மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**செயலாளர்**
**நல்லூர் பிரதேச சபை**
**07.01.2025**

(CR/44054) J-1

**வேலையாட்கள் தேவை**

பழக்கடை ஒன்றிற்கு அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை.

**077 036 6388**

(CS/57138) N-1

**பெயர் மாற்றம்**

23/1, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணத்தில் வசிக்கும் **அல்பேட் ஞானரத்தினம்** ஆகிய நான் எனது பெயரை **அல்பேட் நிர்மலா ஞானரெத்தினம்** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **அல்பேட் நிர்மலா ஞானரெத்தினம்** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

(cs.57135) N-1

**அல்பேட் நிர்மலா ஞானரெத்தினம்**

**பணிப்பெண் தேவை**

கொழும்புத்துறை வளன்புரத்தில் 11 மாதக் குழந்தையை பாதுகாப்பாக பராமரிக்கவும் சமையல் அல்லாத வீட்டு வேலைகளுக்காகவும் குடும்பப் பொறுப்பற்ற 50 வயதிற்குட்பட்ட பணிப்பெண் ஒருவர் தேவை.

(கொழும்புத்துறை வளன் புரம் அயல் பிரதேசத்தைச் சார்ந்தவர்கள் விரும்பத்தக்கது)

**077 228 3700**

**பெண் பராமரிப்பாளர் தேவை**

**ஊரிக்காடு வல்வெட்டித்துறையில் இயங்கி வருகின்ற வல்வை முதியோர் இல்லத்திற்கு**

பெண் பராமரிப்பாளர் மற்றும் சமையல் வேலை செய்யக்கூடியவர் தேவை.

உணவு தங்குமிட வசதி இலவசம்.

தகுந்த சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: **077 810 6857, 077 154 2067, 021 226 5551**

(cs 57136) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



SDBவங்கி
சணச அபிவிருத்தி வங்கி பிஎல்சி. இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையினால் விசேடமாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.Fitch Rating BB+ [lka], Reg. No: PB62PQ
#உங்களைமதிக்கும்






## மின்சாரக் கட்டண முன்மொழிவு: பொதுமக்களிடம் கருத்துக்கேட்பு

யாழ்ப்பாணம், ஜன. 7

இலங்கை மின்சாரசபையினால் முன்மொழியப்பட்ட மின்சார கட்டணம் தொடர்பில், வடமாகாண மக்களின் கருத்துகளை கேட்டறியும் நிகழ்வு யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் லலித் சந்திரலால் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.

வடமாகாணத்தின் திணைக்களங்கள், சிவில் சமூக அமைப்புகள், பொதுமக்கள், அரச மற்றும் அரச சார் பற்ற நிறுவனங்கள், வர்த்தகர்கள், பொறியியலாளர் கள், பேராசிரியர்கள் என பல தரப்பினரும் வடமாகா ணத்தின் ஐந்து மாவட்டங்களையும் பிரதிநிதித்துவபடுத்தி தமது கருத்துகளைப் பதிவு செய்தனர். இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் லலித் சந்திரலால், ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் தமித்த குமாரசிங்க, ஆணைக் குழுவின் பிரதிப் பணிப்பாளர் நிலாந் சப்புமனகே ஆகி யோரும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ம-125)



## புதிய கடைகள் கையளிப்பு!

பளைப் பொதுச்சந்தை வளாகத்தில் பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டத் தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட கடைத்தொகுதிகளைக் கையளிக்கும் நிகழ்வு பிரதேசசபைச் செயலாளர் திருமதி தர்சினி தயானந்தன் தலைமையில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராகப் பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் இ.த.ஜெயசீலனும் சிறப்பு விருந்தினராக கிளிநொச்சிப் பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் ப. சத்தியராக வனும் கலந்துகொண்டனர். (ச-25,9,213)

பச்சிலைப்பள்ளி மக் களின் வேண்டுகோ ளுக்கிணங்க, நாடா ளுமன்ற உறுப்பின ரான ரஜீவன் ஜெயச் சந்திரமூர்த்தியின் ஒழுங்குபடுத்தலில் கிளாலிப்பகுதி மக்க ளுக்கு கடந்த செவ் வாய்க்கிழமை இல வச மருத்துவ முகாம் முன்னெடுக் கப்பட்டது.

கிளிநொச்சிப் பிராந் திய சுகாதார சேவை கள் பணிப்பாளர் மருத்துவர் வினோத னின் நேரடி வழிப்ப டுத்தலில் இந்த மருத் துவச் சிகிச்சை முகாம் செயற்படுத்தப்பட்டது. (ச-33-27)

## பதுளை ஆலயப் புனரமைப்பு; சந்நிதியான் ஆச்சிரமம் உதவி

பதுளை, ஜன.7

பதுளை வேவெஸ்ஸ ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயப் புனரமைப்புக்கென முதலாம் கட்ட நிதியாக இரண்டு லட்சம் ரூபா சந்நிதியான் ஆச்சிரம நிர்வா கத்தினரால் வழங்கிவைக்கப்பட்டுள்ளது. நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள், கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முதல்வர் ச.லலீசன், ஆலய நிர்வாகத்தினர் மற்றும் சந்நிதியான் ஆச்சிரமத் தொண்டர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-45-66)





அரச ஆயுள்வேத வைத்திய அதிகாரிகள் சங்கத்தி னருக்கும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநா யகனுக்கும் இடையிலான சந்திப்பு ஆளுநர் செய லகத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

இதன்போது அரச ஆயுள்வேத வைத்திய அதிகாரி கள் சங்கத்தினரால், வடக்கு மாகாணத்தில் காணப் படுகின்ற ஆயுள்வேத வைத்தியசாலை தொடர்பான தேவைப்பாடுகள், வைத்திய அதிகாரிகள் எதிர்நோக் குகின்ற சவால்கள் போன்ற விடயங்கள் தொடர்பில் எடுத்துக்கூறப்பட்டன. ஆயுள்வேத வைத்தியர்க ளின் இடமாற்றம், வைத்தியர்களின் தற்காலிக இணைப்பு ஆகியவற்றில் வெளிப்படைத்தன்மை பேணப்படவேண்டும் எனச் சங்கத்தினரால் கோரிக் கையும் முன்வைக்கப்பட்டது. (ச-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 26 . 09 . 1945



மறைவு 06 . 01 . 2025

## கணபதிப்பிள்ளை சிவதாசன்

**(இளைப்பாறிய ஆசிரியர் - யா/ சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி)**

யாழ்ப்பாணம், மூளாய் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் இளைப்பாறிய ஆசிரியருமாகிய திரு கணபதிப்பிள்ளை சிவதாசன் அவர்கள் நேற்று (06.01.2025) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி கணபதிப்பிள்ளை - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி கார்த்திகேயர் - செல்லம் தம்பதியரின் அன்பு மருமகனும், ஸ்ரீதேவி அவர்களின் அன்புக் கணவரும், சிவரூபன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - வலிமேற்கு பிரதேசசபை, பகுதிநேர விரிவுரையாளர் தொழிநுட்பக் கல்லூரி கொக்குவில்), சிவசொரூபி (கனடா), சிவலேனுகா (Executive officer, இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவசங்கரி (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் , பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை - யாழ்ப்பாணம்), கிருஸ்ணமேனன் (கனடா), கிஷோ (தொழில்நுட்ப உத்தியோகத்தர் - கட்டடங்கள் திணைக்களம், மன்னார்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சரஸ்வதி, சிவகாமசுந்தரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், செல்வராசா J.P (இளைப்பாறிய மலேரியா தடுப்பு உத்தியோகத்தர்) அவர்களின் மைத்துனரும், பிரீத்தி, லதுசன், லிதுஷன், மதுஷன், தருணிகா, தஸ்விகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.01.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மூளாய் பித்தனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்
மூளாய் கிழக்கு.
(CR/44055) J-1
021 225 2372, 077 779 0001


# அரசியல்கைதிகளை விடுவிக்குக மருதனார்மடத்தில் இன்று போராட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 7

அரசியல்கைதிகளை விடுதலை செய்யக்கோரி மருதனார்மடம், சுன்னாகத்தில் இன்று கையெழுத்துப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

நீண்டகாலமாக விசாரணையின் பேரில் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக்கோரி வடக்கு கிழக்குத் தழுவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் கையெழுத்துப் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் இந்தக் கையெழுத்துப் போராட்டம் நடத்தப்படவுள்ளது. (ம66)

# ஒப்பந்தத்தின் பின்னரும் தொடர்கிறது ஒலிபரப்பு!

## சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ்ப்பாணம் மாநகரசபை தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 7

யாழ்ப்பாணம் மாநகரசபையுடனான ஒப்பந்தம் நிறைவடைந்த போதிலும், யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் விதிமுறைகளை மீறிய வகையில் ஒலிபரப்புச் சேவைகள் இடம்பெறுகின்றன. இதற்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ்ப்பாணம் மாநகர ஆணையாளர் கிருஷ்ணேந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். மாநகரசபையின் ஆளுகைக்கு உட்பட்ட நகர்ப் பகுதியில் இடம்பெற்று வருகின்ற விளம்பர ஒலிபரப்புச் சேவையின் ஒப்பந்தம் டிசெம்பர் மாதம் 31ஆம் திகதியுடன் நிறைவடைந்துள்ளது. எனினும், யாழ்ப்பாணம் மாநகர சபையின் அனுமதி இல்லாமல் தொடர்ந்து சேவைகள் இடம்பெற்று வருகின்றன. எனவே, இந்தச் செயற்பாடுகளுக்கு எதிராக பொலிஸார் ஊடாக சட்டநடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளோம் - என்றார். (ம-125)

# அரச இரும்பை விற்க முயன்ற மூவர் கைது

அரசாங்கத்துக்குச் சொந்தமான ஒருதொகை இரும்பை விற்பனைசெய்ய முயன்ற குற்றச் சாட்டில் அரச உத்தியோகத்தர்கள் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பாணந்துறை வடக்குப் பொலிஸார் தெரிவித்தனர். கடந்தகாலங்களில் வெலிபென்ன பிரதேசத்தில் பாலம் ஒன்றை அமைக்க ஒருதொகை இரும்பு கொண்டுசெல்லப்பட்டுள்ளது.

ஆயினும் இந்தத் திட்டம் தோல்வியடைந்ததால் அந்த இரும்புகளை மீண்டும் கொழும்புத் தலைமையகத்துக்குக் கொண்டு செல்லும்வழியில் சந்தேகநபர்கள் அவற்றை விற்பனை செய்ய முயற்சித்துள்ளனர் என்று கூறப்படுகின்றது. அரசகட்டுமான அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமானது என்று கூறப்படும் வாகனத்தின் சாரதி உட்பட மூவரே கைதுசெய்யப்பட்டுள்ளனர். (எ-இ)


## பராமரிப்பாளர் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் முதியோர் நோயாளர் பராமரிப்பு நிலையத்திற்கு அனுபவமுள்ள பெண் பராமரிப்பாளர் தேவை.

தொடர்பு: 077 712 6859
077 712 6860
076 252 5725



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## University of Jaffna

Department of Computer Science
Centre for Open and Distance Learning

### கணினிப் புலத்தில் கற்கை நெறிகள் - 2025

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கணினி விஞ்ஞானத் துறையால், திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையத்தினூடாக வழங்கப்பட்டுவரும் கணினிப்புலம் சார் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன:

**Building Blocks of Internet of Things**
- 10 Saturdays (9:00 - 12:00)
- Course Fee LKR 15,000.00

**Python for Problem Solving**
- 10 Saturdays (13:00 - 16:00)
- Course Fee LKR 13,000.00

**Responsive Web Development**
- 10 Sundays (9:00 - 12:00)
- Course Fee LKR 13,000.00

**Advanced Web Development**
- 10 Sundays (13:00 - 16:00)
- Course Fee LKR 13,000.00

- க.பொ.த, உயர்தரப் பரீட்சை எழுதிய பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், உத்தியோகத்தர்கள், மற்றும் கணினித்துறையில் ஆர்வமுள்ள அனைவருக்குமானது.
- முற்றிலும் செயன்முறைகளினூடான, தமிழ் மொழி மூல வகுப்புகள், நேரடி அமர்வுகளாக நடைபெறும்.
- தர்க்க மற்றும் கணிதப் புதிர்கள் உள்ளடங்கிய தகுதிகாண் தெரிவுப் பரீட்சை மூலம் விண்ணப்பதாரிகள் கற்கைநெறிகளுக்கு உள்வாங்கப்படுவார்கள்.

| விண்ணப்ப முடிவுத்திகதி | தெரிவுப் பரீட்சை | கற்கைநெறிகள் ஆரம்பம் |
|---|---|---|
| 11/01/2025 | 18/01/2025 | 01/02/2025 |

விண்ணப்பங்கள், "www.csc.jfn.ac.lk/expr/application-process" எனும் இணையப் பக்கத்தில் வழங்கப்பட்டுள்ள நிகழ்நிலை விண்ணப்பப் படிவத்தினூடாக மட்டுமே சமர்ப்பிக்கப்படல் வேண்டும். முறையாகப் பூரணப்படுத்தப்பட்ட உங்கள் விண்ணப்பத்தை, விண்ணப்பக் கட்டணம் ரூ. 500.00 க்கான வங்கிப்பற்றுச்சீட்டின் மென்பிரதியை இணைத்துச் சமர்ப்பிக்கவும். கட்டணங்கள் அனைத்தும், வழமையான வைப்புச் சீட்டைப் பயன்படுத்தி, மக்கள் வங்கியின் கிளையொன்றினூடாக மட்டுமே செலுத்தப்படல் வேண்டும்.

DCS

மேலதிக விபரங்களுக்கு:
www.csc.jfn.ac.lk/expr/tamil-version/
021 221 8194

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
07.01.2025



# மரண அறிவித்தல்



## இரத்தினசபாபதி மங்கையற்கரசி

சுன்னாகம் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினசபாபதி மங்கையற்கரசி அவர்கள் நேற்று (06.01.2025) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் மட்டுவில் காலஞ்சென்ற துரைசிங்கம்-தங்கம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், மூளாய் காலஞ்சென்ற கோவிந்தர்-லோகாம்பிகை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற இரத்தினசபாபதி (ஓய்வு பெற்ற நீர்ப்பாசன திணைக்கள பிரதம லிகிதர்) அவர்களின் அன்பு மனைவியும் பவானி (ஜேர்மனி), கௌரி (சுன்னாகம்), பாலகுமரன் (கண்ணன்-சுவிஸ்), குகதர்சினி (தர்சா-லண்டன்), சிவகுமரன் (லண்டன்), ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற மோகனராஜன் (ஜேர்மனி), ஸ்ரீசண்முகநாதன் (சுன்னாகம், ஓய்வுநிலை விஞ்ஞான ஆய்வுகூட உதவியாளர் செங்குந்த இந்துக் கல்லூரி, உரும்பிராய் இந்துக்கல்லூரி), சரோஜினிதேவி (மதி-சுவிஸ்), சிவகரன் (லண்டன்), பங்கையற்செல்வி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் பிரவீன்,அஸ்வினி, அக்ஷி, தீபிகை, சஷ்டிகவசன், ஹர்ஷா, திரிஷா, கனிஷா, நிலானி, ஜானுகா, கஜானன், விஷாகன், சிந்துஜா, ஜசிந்தன், துவாரகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் மீரா, சுருதி, ஷிவ்யா, தக்ஷின் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஜெயலக்சுமி, மங்களேஸ்வரி, மனோரஞ்சினி, கெங்காதரன், மல்லிகாதேவி, செந்திவேல், சண்முகவடிவேல், கலாவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் செல்வராசா, இராசநாயகம், தர்மராஜா, கலாவதி, தம்பிரட்ணம், ராஜேஸ்வரி, பிரேமாவதி காலஞ்சென்றவர்களான அரியரத்தினம், தம்பிராசா, தனலக்சுமி, தங்கம்மா மற்றும் பரமநாதன், தேவநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (09.01.2025) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

(CS 2216) V-1

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தங்கநகையை...

அவரை கட்டிவைத்துத் தாக்கி வீடியோ வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட நபர் தெரிவித்ததாவது:-

டிசெம்பர் மாதம் 24ஆம் திகதி உரும்பிராய் பகுதியில் அமைந்துள்ள வெதுப்பகம் ஒன்றுக்குச் சென்ற நிலையில் நிலத்தில் தங்கநகை போன்ற ஆபரணம் இருப்பதை அவதானித்தேன். அதனை குறித்த வெதுப்பகத்தில் ஒப்படைத்தேன்.

இரண்டு நாள்களின் பின்னர், அந்த வெதுப்பகத்துக்கு நான் சென்று 'ஆபரணத்தை உரியவர்களிடம் வழங்கினீர்களா?' என்று வினவினேன். அவர்கள் 'இல்லை' என்று தெரிவித்தனர்.

அதன் பின்னரும் இரண்டு நாள்கள் சென்ற நிலையில், வெதுப்பகத்துக்கு மீண்டும் சென்று, 'ஆபரணத்தை உரியவர்களிடம் வழங்கினீர்களா?' என்று வினவினேன். அப்போதும் அவர்கள் 'இல்லை' என்றே தெரிவித்தனர்.

இதையடுத்து, 'ஆபரணத்தைத் தாருங்கள். ஏதாவது சிறுவர் இல்லத்துக்கு வழங்குவோம்' என்று நான் கூறினேன். இதையடுத்தே, அந்த வெதுப்பகத்தில் நின்ற இருவர் என் கழுத்தைப் பிடித்துத் தாக்கினார்கள். என்னைத் தாக்க வேண்டாம் என்று நான் மன்றாட்டமாகக் கேட்டபோதிலும், ஐந்துக்கும் மேற்பட்டவர்கள் என்னைக் கட்டிவைத்துக் கடுமையாகத் தாக்கியதுடன் அதை வீடியோவாகவும் பதிவுசெய்தனர்.

காயமடைந்த நான் கோப்பாய் பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கிவிட்டு, மருத்துவமனைக்கு அம்புலன்ஸில் சென்றுவிட்டேன். எனினும், என்னைத் தாக்கியவர்களை கோப்பாய் பொலிஸார் கைதுசெய்யவில்லை. பொலிஸ் நிலையம் வந்த சட்டத்தரணி ஒருவர், 'சமாதானமாகச் செல்லுங்கள்' என்றார். எனக்கு நியாயம் வேண்டும் என்னைத் தாக்கியவர்களை கைதுசெய்ய வேண்டும். இல்லாவிட்டால் உயிர் மாய்ப்பேன் - என்றார்.

நேற்று இரவு வரையிலான தகவல்களின் அடிப்படையில், இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய ஐந்து சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களில் மூவர் கோப்பாய் பொலிஸாராலும், இருவர் யாழ்ப்பாணப் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினராலும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரியவருகின்றது.

(அ-ம-27-26-20)

## பொலிஸ்,...

இங்கிரிய பகுதியில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தாவது:-

வடமாகாணத்தில் சிறு பிரச்சினைகள் இருப்பதாக எம்மால் உணரமுடிகின்றது. அங்குள்ள மக்களுக்கு சிறப்புச் சலுகைகள் வழங்கப்பட வேண்டும். இந்த நிலைப்பாட்டிலேயே நான் இருக்கின்றேன்.

சிறப்புச் சலுகைகள் வழங்கப்படவேண்டும் என்பதற்காக, அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தில் உள்ள பொலிஸ், காணி அதிகாரங்களை வழங்க விடமாட்டோம். அவற்றைத் தவிர ஏனையவற்றை வழங்குவதற்கு எந்தத் தடையும் இல்லை. இலங்கையென்பது இறைமையுள்ள நாடு. நாம் இந்தியாவின் கைப்பாவையாக மாறக்கூடாது.

இன்றைய உலகில் வெளிநாட்டுத் தொடர்புகள் அவசியம்தான். எமக்கு நன்மைகளை ஏற்படுத்தக்கூடிய வெளிநாட்டு உறவுகளைத்தான் நாம் பேணவும், வளர்க்கவும்வேண்டும். மாறாக பிரச்சினைகளையும், அழுத்தங்களையும் சுமக்கக்கூடாது - என்றார்.

(அ-ம-44)

## விவசாய...

வவுனியாவில் ஏராளமான வயல் நிலங்களில் கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன என்றும், இது தொடர்பில் அரசாங்க அதிகாரிகள் அசமந்தமாகச் செயற்படுகின்றனர் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் விவசாயிகள் தெரிவித்ததாவது:-

வவுனியா தாண்டிக்குளம், நொச்சிமோட்டை, பேயாடி கூழாங்குளம் போன்ற பகுதிகளில் வயல் நிலங்களில் மண்ணிட்டு நிரப்பி மேட்டு நிலங்களாகக் காட்டி அதனுள் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இதனால், விவசாயம் செய்வதற்கான நிலங்கள் இல்லாமல் போகின்ற நிலைமை வவுனியா மாவட்டத்தில் உருவாகுவதற்கான வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன. அரச அதிகாரிகளுக்கு இது தொடர்பில் தெரிவிக்கப்பட்ட போதிலும், எந்தவொரு காத்திரமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை - என்றனர்.

(அ-ம-110)

## பேருந்துகள்...

இந்த அலங்காரப் பொருள்கள் வீதிகளில் சாரதிகளுக்கும், பொதுமக்களுக்கும் வீதிப் பாதுகாப்பில் கவனக் குறைவை ஏற்படுத்துகின்றன. இதனால், விபத்துகள் ஏற்படும் சந்தர்ப்பங்கள் அதிகம் உள்ளன. ஆதலால் தான், அவை அகற்றப்படுகின்றன என்று பொலிஸ் தரப்பு விளக்கமளித்துள்ளது.

எனினும், தமது வாகனங்களை அழகாகப் பேணுவதற்குத் தடைபோடும் அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு பேருந்துகள் மற்றும் ஓட்டோக்களின் உரிமையாளர்கள் கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர்.

(அ-ம-இ)

## பதவி...

பொருளாதாரச் சுருக்கம், விலையேற்றம், வரி விதிப்பு மற்றும் பணவீக்கம் உள்ளிட்ட காரணங்களால் அண்மைக்காலமாக பிரதமர் ட்ரூடோவுக்கு கடும் எதிர்ப்பு ஏற்பட்டுள்ளது. அவர் பதவிவிலக வேண்டும் என்று ட்ரூடோவின் சொந்தக் கட்சியான லிபரல் கட்சிக்குள்ளேயே பல்வேறு வலியுறுத்தல்கள் முன்வைக்கப்பட்டு வந்தன. ட்ரூடோவைப் பதவி விலகக் கோரும் வகையில் நாளை பொதுக்கூட்டம் ஒன்றையும் லிபரல் கட்சியினர் (அதிருப்தியாளர்கள்) ஏற்பாடு செய்திருந்தனர். இதைத் தொடர்ந்தே பிரதமர் ட்ரூடோ பதவி விலகுவதாக அறிவித்துள்ளார்.

புதிய பிரதமர் தேர்வாகும் வரை பிரதமர் பதவியில் தொடரவுள்ளதாகவும் பிரதமர் ட்ரூடோ அறிவித்துள்ளார். இதற்காக மார்ச் மாதம் 24ஆம் திகதி வரை அவர் நாடாளுமன்றத்தை ஒத்திவைத்துள்ளார்.

பிரதமர் ட்ரூடோ, ஈழத் தமிழர்களுடன் நெருக்கமான உறவைக் கொண்டவர். அவருடைய ஆட்சியிலேயே, இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலைதான் என்ற தீர்மானத்தை கனேடிய நாடாளுமன்றம் நிறைவேற்றியது. சர்வதேச நாடுகளின் நாடாளுமன்றம் ஒன்று, இலங்கையில் நடைபெற்றது இனப்படுகொலைதான் என்பதை பகிரங்கமாக ஏற்றுக்கொண்ட முதலாவது சந்தர்ப்பமாக இது அமைந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

(அ-ம-இ)

## அரிசி...

வடமாகாண உதவிப்பணிப்பாளர் அப்துல் லத்தீவ் ஜக்வார் சாதிக் தெரிவித்தாவது:-

அரிசி பதுக்கல்கள் தொடர்பில் 2024ஆம் ஆண்டில் வடமாகாணத்தில் 774 சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வவுனியா மாவட்டத்தில் மட்டும் 126 சிறப்புச் சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனினும், வடமாகாணத்தில் பதுக்கல்கள் பெரியவில் இடம்பெறவில்லை - என்றார்.

(அ-ம-110)

## கட்டாக்காலிகளை...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தாவது:-

வடமாகாணத்தில் வீதிகளில் கட்டாக்காலிகளின் நடமாட்டம் மிகையாக அதிகரித்துள்ளது. இதனால், வீதி விபத்துகள் ஏற்படுகின்றன. அத்துடன், மக்களுக்கு இடையூறுகளும் ஏற்படுகின்றன. எனவே, கட்டாக்காலிகளை உரிய முறைமைகளைப் பின்பற்றி வளர்க்குமாறு அவற்றின் உரிமையாளர்களைக் கோருகின்றோம்.

இன்று முதல் இந்த விடயம் தொடர்பில் பொலிஸார் தீவிரமான கண்காணிப்புகளை மேற்கொள்ளவுள்ளனர். எதிர்வரும் ஒரு வாரத்துக்கு பொலிஸார் இது தொடர்பான எச்சரிக்கைகளை கட்டாக்காலிகளின் உரிமையாளர்களுக்கு வழங்குவார்கள். எச்சரிக்கைகளின் பின்னரும் அதே நிலை தொடர்ந்தால், கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் - என்றார்.

(அ-ம-26)

## போர்க்...

ஏனெனில் மிகமோசமான தமிழினப் படுகொலையினால் பாதிக்கப்பட்டவர்கள் இன்னமும் நீதிக்காகக் காத்திருக்கிறார்கள்.

இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்களுடன் தொடர்புடையவர்கள் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப்பட வேண்டும். எமது நிலைப்பாட்டில் என்றும் மாற்றங்கள் ஏற்படாது. தமிழ் மக்களுக்கு ஆதரவானதும், இலங்கை அரசாங்கத்துக்கு எதிரானதுமான எமது நிலைப்பாட்டை நாம் தொடர்ந்து வலியுறுத்துவோம்.

கனடாவில் வாழும் தமிழ்ச் சமூகத்தினரை நான் பெரியளவில் மதிக்கின்றேன். கடின உழைப்பாளிகளான அவர்களைக் கௌரவப்படுத்துகின்றேன். தமிழர்களைக் கொண்டாடுவதில் நாம் பெருமையடைகின்றோம் - என்றார்.

(அ-ம-இ)

## மேரிபஸ்ரியன்...

கள் இடம்பெற்றன. அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் என நூற்றுக் கணக்கானவர்கள் இந்த அஞ்சலிப்பு நிகழ்வில் கலந்து கொண்டனர்.

வங்காலை புனித அன்னம்மாள் ஆலயத்தின் பங்குத்தந்தையாகச் செயற்பட்ட அருட்தந்தை மேரிபஸ்ரியன் அடிகளார், நாட்டில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்காக தொடர்ச்சியாகக் குரல்கொடுத்து வந்தார். போரால் உயிரிழந்த மக்களின் உடல்களை அவர் மீட்டு அடக்கம் செய்ததுடன் மனிதாபிமானப் பணிகளிலும் ஈடுபட்டு வந்தார்.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே, 1985ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 6ஆம் திகதி அவர் அரச படைகளால் படுகொலை செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

(அ-ம-56-60)

## அரசியல்...

இந்தக் கையெழுத்துச் சேகரிப்பு நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது. ஏழாவது நாளான நேற்று யாழ்ப்பாணத்தில் கையெழுத்துச் சேகரிப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மடத்தடிப் பகுதியில் இடம்பெற்ற இந்த கையெழுத்துச் சேகரிப்பில், நாடாளுமன்ற உறுப்பினரான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், யாழ். மறைமாவட்ட குரு முதல்வர் ஜெபரட்ணம் அடிகளார், யாழ். பல்கலைக்கழகத்தின் கலைத்துறைப் பீடாதிபதி எஸ். ரகுராம், யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியின் முன்னாள் அதிபர் அருட்தந்தை ஜெரோம் செல்வநாயகம், அடிகளார் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொன்.ஐங்கரநேசன், யாழ். மாநகர சபையின் முன்னாள் முதல்வர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன், குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் முருகையா கோமகன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை, யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு முன்பாக இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில் நூற்றுக் கணக்கானவர்கள் கலந்துகொண்டனர்.

(அ-ம-125-20-26-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் வடமராட்சி உடுப்பிட்டியில் 14 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

- 2 பரப்பாகவும் 3பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
- உடுப்பிட்டி சந்நிதி கோயில் செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
- நல்ல சூழல், நன்னீருற்று, நிலப்பரப்பு
- பொக்கன் சந்திக்கு அருகாமையில் உடுப்பிட்டி வாசிகசாலை சந்தி 300 மீற்றர் தூரம்
- சந்நிதி முருகன் கோயில் 2 கிலோமீற்றர் கெருடாவில் கந்தசாமி கோயில் 200 மீற்றர் தூரம்.
- வழி இலக்கம் 751 மற்றும் 767 அரச, தனியார் பேருந்து செல்லும் பிரதான காபற் வீதி
- பார்வை நேரம் காலை 8 மணி முதல் மாலை 6.00 மணி வரை.

(CS/2212) J-1

**தொடர்பு:- 070 290 2338 076 017 1105**

# உயிரியல் வினா விடை வகுப்புக்கள்

**2026 A/L , 2025 A/L மற்றும் 2025 Day Batch மாணவர்களுக்கான நேரடி மீட்டல் வகுப்புக்கள்.**

**2026 A/L - த. கெங்காதரன் ஆசிரியர்**

Time Table - சனி, ஞாயிறு 4.30Pm to 6.00 Pm

2025 A/L - ஆரம்பம் - 11.01.2025

Time Table - சனி, ஞாயிறு 3Pm to 4.30 Pm

**2025 A/L Day Batch**

**சனி, ஞாயிறு 8Am to 9.30 Pm**

அனைத்து பிரிவுகளுக்கும் Zoom வகுப்புக்கள் நடைபெறுவதுடன் ஆங்கில மொழி மூல வகுப்புக்களும் (நேரடி மற்றும் Zoom மூலம்) Dr கஜன் மூலம் நடைபெறுகின்றது.

இடம் - 127/15, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

(CS/57143) J-1

தொடர்புகளுக்கு: **077 744 9910, 075 391 3990**



## ஆன்மீகப் பாதயாத்திரை

யாழ்ப்பாணம், ஜன.7

திருவெம்பாவை விரதத்தை முன்னிட்டு இலங்கை சைவமகாசபையின் வருடாந்த ஈழத்துச் சிதம்பரம் நோக்கிய ஆன்மீகப் பாதயாத்திரை 11 ஆவது வருடமாக மாதகல் சம்புநாத ஈச்சரர் முன்றலில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணியளவில் ஆரம்பமானது.

இந்த யாத்திரை சம்பில்துறை சம்பு நாத ஈச்சரர் ஆலயத்தில் ஆரம்பமாகி சாந்தை, பனிப்புலம், சுழிபுரம், மூளாய்,பொன்னாலை,காரைநகர்ஆகியவற்றிலுள்ள ஆலயங்களையும் தரிசித்தவாறு காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தைச் சென்றடைந்தது. யாத்திரையில் இலங்கை சைவமகாசபையினர், தமிழ்ச்சைவப்பேரவையினர், சிவமங்கையர், சிவத்தொண்டர்கள், அடியவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

(ச-45-125-66)

## வாடகைக்கு விற்பனைக்கு

- யாழ்நகர் நாவலர் வீதியில் கடை வாடகைக்கு உள்ளது.
- LiteAce Van (57XXXX) விற்பனைக்கு உள்ளது.

தொடர்புகளுக்கு: **077 217 4741**

## பராமரிப்பாளர் உடன் தேவை

**K.M. Health Care** எனும் எமது நிறுவனத்திற்கு வயோதிபர்கள், நோயாளர்கள், குழந்தைகள் போன்றோரை தங்கி நின்று பராமரிப்பதற்கு ஆண், பெண் பராமரிப்பாளர்கள் உடன் தேவை.

(cs.57137) N-1

**076 136 4991, 076 136 4992**

## விற்பனையாளர்கள் தேவை

யாழில். இயங்கி வரும் வியாபார நிறுவனம் ஒன்றிற்கு விற்பனையாளர்கள் தேவை.

வயது எல்லை - 21 - 45

கொடுப்பனவு நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

(CS/57140) J-1

அழைப்பு எண்:- **076 324 1761**

# மரண அறிவித்தல்

## தம்பிராசா கனகநாயகம்

(ஓய்வுபெற்ற மின் இணைப்பாளர் - இலங்கை மின்சார சபை - சுன்னாகம், 440, பருத்தித்துறை வீதி, நல்லூரில் அமைந்துள்ள கடைத்தொகுதியின் உரிமையாளர், ஆனைக்கோட்டை சந்தியில் அமைந்துள்ள கனகநாயகம் ஸ்ரோர்ஸ் - உரிமையாளர்- யாழ்ப்பாணம் ராஜா சைக்கிள் பார்க் உரிமையாளர்)



தோற்றம் 14.05.1944 மறைவு 05.01.2025

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராசா கனகநாயகம் நேற்றுமுன்தினம் (05.01.2025) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிராசா - அன்னம்மா தம்பதியரின் அன்பு மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான இரத்தினம் - சின்னத்தங்கச்சி தம்பதியரின் அன்பு மருமகனும், பரமேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், தையல்நாயகி (Canada), இராசநாயகம் (பவுணன் - German), கிட்ணபிள்ளை (London) ஆகியோரின் அன்புச் சகோதரனும், நகுலன் (France), தயாளினி (Zonal Education Office - Jaffna), சுரேஸ்குமார், சாந்தகுமார் (London), ஜெயராஜா (SwitzerLand) ஆகியோரின் அன்புத் தந்தையும், நிஷாந்தினி, காலஞ்சென்ற தயாமோகன் (PHI) மற்றும் தர்மினி, தர்சிகா, கங்காயினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்ற திருஞானசம்பந்தன் மற்றும் தேவி, இந்திராணி ஆகியோரின் மைத்துனரும், வர்சிதா, பாணுஜா, தனுஷ், அபிதா, கேஜனா, லேஜிகா, சுருதிகா, ராகவன், சோபி, அக்ஷனா, அர்த்தனா, அவிசாளி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.01.2025) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவகுரு லேன்,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 191 0780, 021 222 5219

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் [illegible] 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.01. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org